©
தமிழ்நாடு அரசு
2018

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 2] சென்னை, புதன்கிழமை, ஜனவரி 10, 2018
மார்கழி 26, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 152, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (C1)த் துறை, நாள்: 2–11–2017.]*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை), ஆணை புது டில்லி, 27 செப்டம்பர் 2017.**

S.O. 3136(E) – 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1955) 3ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு, 2016 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்குதல் ஆணையில் மேற்கொண்டும் திருத்தம் செய்வதற்காக, பின்வரும் ஆணையை இதனால் பிறப்பிக்கிறது, அதாவது:–

1. (1) இந்த ஆணை 2017 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் (நான்காம் திருத்தம்) ஆணை என்று அழைக்கப்படும்.

(2) இந்த ஆணை 01–10–2017ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. 2016 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணையின் 3 ஆம் பகுதியைச் சேர்ந்த (2) உட்பகுதியில், (iii) ஆம் இனத்தில், "30–09–2017" என்னும் எண்கள், எழுத்துகள் மற்றும் சொற்களுக்குப் பதிலாக, "30–09–2018" என்னும் எண்கள், எழுத்துகள் மற்றும் சொற்கள் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

[F.No. S-10/2/2017-ECR & E]

**பி.வி. ராமா சாஸ்திரி,**
*இணைச் செயலாளர்.*

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**குமார் ஜெயந்த்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 161, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, நாள்: 9–11–2017.]*

நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை),
ஆணை புது டில்லி, 25 அக்டோபர் 2017.

S.O. 3422(E) – 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1955) 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு, 2016ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்குதல் ஆணையில் மேற்கொண்டும் திருத்தம் செய்வதற்காக, பின்வரும் ஆணையை இதனால் பிறப்பிக்கிறது அதாவது:–

**1. குறுந்தலைப்பும் தொடக்கமும்:**

(1) இந்த ஆணை 2017ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள் இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் (ஆறாம் திருத்தம்) ஆணை என்று அழைக்கப்படும்.

(2) இந்த ஆணை 29–10–2017ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. 2016 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள் இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணையின் 3 ஆம் பகுதியைச் சேர்ந்த (2) உட்பகுதியின், (ii) ஆம் இனத்தில், பின்வரும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அவையாவன:–

"(ii) 28–04–2018 வரையிலான கால அளவிற்காக சர்க்கரை;"

[F.No. S-10/4/2017-ECR & E]

**பி.வி. ராமா சாஸ்திரி,**
*இணைச் செயலாளர்.*

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**குமார் ஜெயந்த்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை நிலை எண் 162, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (H1)த் துறை, நாள்: 14–11–2017]*

நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை),
ஆணை புது டில்லி, 23–10–2017.

S.O. 3397(E) – 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு, 2016 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்குதல் ஆணையில் மேற்கொண்டும் திருத்தம் செய்வதற்காக, பின்வரும் ஆணையை இதனால் பிறப்பிக்கிறது அதாவது:–

**1. குறுந்தலைப்பும் தொடக்கமும்:–**இந்த ஆணை 2017 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் (ஐந்தாவதுத் திருத்தம்) ஆணை என்று அழைக்கப்படும்.

2. 2016 ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த உரிமத் தேவைகள் இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச், செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணையின் 3 ஆம் பகுதியைச் சேர்ந்த (2) உட்பகுதியின், (iv) ஆம் இனத்தில், “31–10–2017” என்கிற எண்கள், எழுத்துகள் மற்றும் சொற்களுக்குப் பதிலாக, “31–12–2017” என்கிற எண்கள், எழுத்துகள் மற்றும் சொற்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

[F.No. S-10/3/2017-ECR & E]

**பி.வி. ராமா சாஸ்திரி,**
*இணைச் செயலாளர்.*

**குறிப்பு:** முதன்மை ஆணை ***மத்திய அரசின் அரசிதழின் சிறப்பு வெளியீட்டில்,*** பாகம் II—பிரிவு **3,** உட்பிரிவு **(i)** இல் வெளியிடப்பட்டுள்ளது; காண்க: G.S.R. 929 (E) **29–09–2016**), பின்னர் திருத்தப்பட்டதை **27–10–2016** ஆம் நாளிட்ட S.O. 3341 (E), **25–04–2017** ஆம் நாளிட்ட S.O. 1288 (E), **17–05–2017** ஆம் நாளிட்ட S.O.1600 (E), **25–08–2017** ஆம் நாளிட்ட S.O.2785 (E) மற்றும் **27–09–2017** ஆம் நாளிட்ட S.O.3136 (E) ஆகியவற்றில் காண்க.

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**குமார் ஜெயந்த்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை நிலை எண் **169,** கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, நாள்: **24–11–2017.**]*

நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் (உணவு மற்றும் பொது விநியோகத்துறை) ஆணை
புதுடில்லி, **27–10–2017.**

S.O. 3443(E) – **1955**ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் **(10/1955) 3** ஆம் பிரிவு மற்றும் **1966** ஆம் ஆண்டு சர்க்கரை (கட்டுப்பாடு) ஆணையின் பகுதி **5** ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, இந்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின், உணவு மற்றும் பொது விநியோகத்துறையின் **28–10–2016** ஆம் நாளிட்ட S.O.3348 (E) ஆம் எண்ணிட்ட ஆணையில் மேலும், பின்வரும் திருத்தங்களை மத்திய அரசு இதனால் செய்கிறது.

மேற்சொன்ன அறிவிக்கையின் பகுதி 2இல் உள்ள ''2017 அக்டோபர் 28 ஆம் நாள்'', என்ற எண்கள், எழுத்துக்கள் மற்றும் சொற்களுக்குப் பதிலாக, ''2017, டிசம்பர் 31" என்ற எண்கள், எழுத்துக்கள் மற்றும் சொற்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

[கோப்பு எண் **1(6)/2016–**SP-I]

**ஜி. எஸ். சாஹூ**
*இயக்குநர்,*
*(சர்க்கரைக் கொள்கை)*

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**குமார் ஜெயந்த்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.